மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் நாள் திங்கள்கிழமை
இ.ம.எண்.282/2017
அ.வ.எண்.60/2017

1. ராஜாத்திமணி
2. கே.ஆர்.மணி
(1 ம்வாதியின் அதிகார முகவர்) ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

சார் ஆட்சியர், மேட்டூர் அணை–1. ... எதிர்மனுதாரர்/6 ம்பிரதிவாதி

இம்மனு கடந்த 21.12.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எல்.கணபதிசுப்ரமணியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.எஸ்.ஹரிநாராயணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

(i) மனுசொத்தினை நாச்சியப்ப கவுண்டரும், நாச்சப்பகவுண்டரும் நாச்சம்மாளிடமிருந்து 20.03.1946 ல் கிரயம் பெற்றனர். நாச்சியப்பகவுண்டர் மற்றும் நாச்சப்பகவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு நாச்சியப்ப கவுண்டரின் மனைவி பூவதியம்மாள், நாச்சப்ப கவுண்டரின் மகன் செல்லப்பன் ஆகியோர் 19.05.1953 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டனர். மேற்படி நாச்சப்ப கவுண்டர் மகன் செல்லப்பனிடமிருந்து 24.09.1982 ல் சின்னப்பகவுண்டர் கிரயம் பெற்றார். சின்னப்ப கவுண்டர் மற்றும் அவரது இளவர் மகன் புண்ணியமூர்த்தியிடமிருந்து தேவராஜன்

19.05.1988ல் கிரயம் பெற்றார். 1ம்மனுதாரரின் தாயார் பழனியம்மாளுக்கு அவரது மகனான மேற்படி தேவராஜன் 20.01.1992ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டார். ஆகவே 1ம்மனுதாரரின் தாயார் பழனியம்மாள் உரிமையாளர் ஆவார். 1ம்மனுதாரருக்கு அவரது தாயார் பழனியம்மாள் 24.01.1992ல் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எழுதி கொடுத்துவிட்டார். எனவே மனுசொத்திற்கு 1ம்மனுதாரர் தான் உரிமையாளர் ஆவார்.

(ii) 1ம்மனுதாரர், 2ம்மனுதாரருக்கு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் 2ம்மனுதாரர் வழக்கை நடத்தி வருகிறார். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ச.எண்.277/6 ஏ–க்கு கிழக்கு பக்கத்தில் சொத்துகள் உள்ளது. மேலும் 1ம்மனுதாரரின் சொத்துகளையும், 1முதல் 4 பிரதிவாதிகளின் சொத்துகளையும் ஒரு ரோடு பிரிக்கிறது. அது ச.எண்.277/6பி1 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது மாதிரிவரைபடத்தில் சிகப்பு கலரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ரோடானது நீல வர்ணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1முதல் 4 பிரதிவாதிகளின் சொத்துகள் மஞ்சள் வர்ணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.மேற்படி ரோட்டிற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு ச.எண்.277/6பி1 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு முன்பு தென்வடல் கொடிக்கால் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(iii) வழக்கு ச.எண்.277/6 ஏ–வை 1ம்மனுதாரருக்கு எழுதிகொடுத்தவருக்கு, எழுதி கொடுத்தவரான தேவராஜன் 1988ல் கிரயம் பெற்று பட்டாவிற்காக விண்ணப்பித்தார். அவருக்கு பட்டா எண்.1715 வழங்கப்பட்டது. மேலும் அனைத்து வருவாய்துறை ஆவணங்களிலும் அவருடைய பெயர் மாற்றப்பட்டது. 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பட்டா மாறியது தெரிந்துள்ள போதும், 3 ஆண்டுகளுக்குள் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை.

(iv) 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வழக்கு ச.எண்.277/6 ஏ–ல் உள்ள 0.15 செண்டில் எவ்வித உரிமையும் இல்லாமல் உரிமை உள்ளதாக கூறிவருகின்றனர். இந்நிலையில் 1ம்பிரதிவாதி 6ம்பிரதிவாதியிடம் ச.எண்.227/6 ஏ–ல் உள்ள 15 செண்டில் உரிமையும், சுவாதீனமும் உள்ளதாக கூறி ஆட்சேபணை மனு செய்தார். 6ம்பிரதிவாதி கிராம

நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் 7ம்பிரதிவாதியின் அறிக்கையின் பேரில் அளவைகள், எல்லைகள் சட்டம், பட்டா பாஸ்புத்தக சட்டம் மற்றும் வருவாய்துறை நிலை ஆணையில் கூறியுள்ள வழிமுறைகளை பின்பற்றாமல் செயல்பட்டு வருகிறார். உரிமைமூலம் குறித்து வழக்கு நிலுவையில் இருந்தால் உரிமையியல் நீதிமன்றம் தான் உரிமைமூலம் குறித்தும், சுவாதீனம் குறித்தும் தீர்மானிக்க முடியும். ஆகவே வழக்கு சொத்து 1ம்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமைமூலம் குறித்து இவ்வழக்கு நிலுவையில் உள்ளதால் எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதியின் பட்டா ரத்து நடவடிக்கையை நிறுத்த உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 6ம்பிரதிவாதியின் பதிலுரை குறிப்பாணையின் பேரில் எதிர்மனுதாரரால் எதிருரையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.</u>

(i) மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் பொய்யானது. பழனியம்மாளுக்கு விற்பனை செய்த சின்னப்பகவுண்டர் மற்றும் புண்ணியமூர்த்திக்கும் வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை மற்றும் கிரய பத்திரம் எழுதிக் கொடுக்கவும் உரிமையில்லை. 1ம்மனுதாரருக்கும் பழனியம்மாள் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமையில்லை. ஆகவே 1ம்மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என கூறுவது பொய்யாகும்.

(ii) மேட்டுர் தாலுக்கா, ஆலமரத்துப்பட்டி கிராம பட்டா எண்.5 முத்தாயம்மாள் மற்றும் அவரது மகன்களான செங்கோடகவுண்டர் மற்றும் ராமசாமி பெயரில் இருந்தது. அவர்களுக்கு பழைய ச.எண்.140, 141 புதிய ச.எண்.277/6க்கு பட்டா வழங்கப்பட்டது. ச.எண்.277/6 என்பது 277/6ஏ மற்றும் 6பி என உட்பிரிவு செய்யப்பட்டது. 277/6ஏ சொத்திற்கான பட்டாஎண்.1715 தேவராஜிற்கும், பட்டா எண்.1716 செங்கோட கவுண்டருக்கும், சின்னப்ப கவுண்டருக்கும் வழங்கப்பட்டது. ச.எண்.277/6பி என்பது 277/6பி1 விஸ்தீரணம் 0.05.5 அருந்ததியர் மயான பாதை எனவும், 277/6பி2 பட்டா எண்.1716 செங்கோட கவுண்டருக்கு வழங்கப்பட்டுள்ளது. 1ம்மனுதாரருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என கூறுவது பொய்யாகும்.

(iii) இந்த எதிர்மனுதாரர் அளவை மற்றும் எல்லைகள் சட்டம், பட்டா பாஸ்புத்தக சட்டம், வருவாய் நிலை ஆணைகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார் என கூறுவது பொய்யாகும். வழக்கில் கோரியுள்ள பரிகாரம் குறித்து வருவாய் அதிகாரிகள் மட்டும் தான் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதால் இவ்வழக்கினை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பில்லை. எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதி கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் இல்லை. மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.19 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i)(a) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுசொத்தினை நாச்சியப்ப கவுண்டரும், நாச்சப்பகவுண்டரும் நாச்சம்மாளிடமிருந்து 20.03.1946ல் ம.சா.ஆ.2ன் மூலம் கிரயம் பெற்றனர் எனவும், நாச்சியப்பகவுண்டர் மற்றும் நாச்சப்பகவுண்டர் இறந்ததற்கு பின்னிட்டு நாச்சியப்ப கவுண்டரின் மனைவி பூவதியம்மாள், நாச்சப்ப கவுண்டரின் மகன் செல்லப்பன் ஆகியோர் 19.05.1953ல் ம.சா.ஆ.3ன் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் எனவும், மேற்படி நாச்சப்ப கவுண்டர் மகன் செல்லப்பனிடமிருந்து 24.09.1982ல் சின்னப்பகவுண்டர் ம.சா.ஆ.4ன் மூலம் கிரயம் பெற்றார் எனவும், சின்னப்ப கவுண்டர் மற்றும் அவரது இளவர் மகன் புண்ணியமூர்த்தி ஆகியோரிடமிருந்து தேவராஜன் 19.05.1988ல் ம.சா.ஆ.5ன் மூலம் கிரயம் பெற்றார் எனவும், 1ம்மனுதாரரின் தாயார் பழனியம்மாளுக்கு அவரது மகனான மேற்படி தேவராஜன்

20.01.1992ல் ம.சா.ஆ.6 தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்ததன்படிக்கு 1ம்மனுதாரரின் தாயாருக்கு பாத்தியப்பட்டது எனவும், 1ம்மனுதாரருக்கு அவரது தாயார் பழனியம்மாள் 24.01.1992ல் ம.சா.ஆ.7ன்மூலம் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்ததின் அடிப்படையில் 1ம்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது எனவும், 1ம்மனுதாரர் பெயரிலுள்ள கணிணிபட்டா ம.சா.ஆ.8 எனவும், கிஸ்து ரசீதுகள் ம.சா.ஆ.9 எனவும், 1ம்மனுதாரர், 2ம்மனுதாரருக்கு ம.சா.ஆ.1 பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் 2ம்மனுதாரர் வழக்கை நடத்தி வருகிறார் எனவும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ச.எண்.277/6ஏ–க்கு கிழக்கு பக்கத்தில் சொத்துகள் உள்ளது எனவும், அதன் கணிணிபட்டா ம.சா.ஆ.12 எனவும், மேலும் 1ம்மனுதாரரின் சொத்துகளையும், 1முதல் 4 பிரதிவாதிகளின் சொத்துகளையும் ஒரு ரோடு பிரிக்கிறது எனவும், அது ச.எண்.277/6பி1 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது எனவும், வழக்கு சொத்தை காண்பிக்கும் மாதிரி வரைபடம் ம.சா.ஆ.13 எனவும், வழக்கு சொத்தானது மாதிரிவரைபடத்தில் சிகப்பு கலரில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், அந்த ரோடானது நீல வர்ணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், 1முதல் 4 பிரதிவாதிகளின் சொத்துகள் மஞ்சள் வர்ணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மேற்படி ரோட்டிற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு ச.எண்.277/6பி1 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது எனவும், அதற்கு முன்பு தென்வடல் கொடிக்கால் என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் வழக்காடியுள்ளது தெரியவருகிறது.

(i)(b) மேலும் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கு ச.எண்.277/6ஏ–வை 1ம்மனுதாரருக்கு எழுதிகொடுத்தவருக்கு எழுதி கொடுத்தவரான தேவராஜன் 1988ல் கிரயம் பெற்று பட்டாவிற்காக விண்ணப்பித்தார் எனவும், அவருக்கு பட்டா எண்.1715 வழங்கப்பட்டது எனவும், மேலும் அனைத்து வருவாய்துறை ஆவணங்களிலும் அவருடைய பெயர் மாற்றப்பட்டது எனவும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பட்டா மாறியது தெரிந்துள்ள போதும், 3 ஆண்டுகளுக்குள் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை எனவும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வழக்கு ச.எண்.277/6ஏ–ல் உள்ள 0.15 செண்டில் எவ்வித உரிமையும் இல்லாமல் உரிமை உள்ளதாக கூறி வருகின்றனர் எனவும், இந்நிலையில் 1ம்பிரதிவாதி 6ம்பிரதிவாதியிடம் ச.எண்.227/6ஏ–ல் உள்ள 15

செண்டில் உரிமையும், சுவாதீனமும் உள்ளதாக கூறி ஆட்சேபணை மனு செய்தார் எனவும், அந்த விசாரணைக்கான அழைப்பாணை ம.சா.ஆ.15, 17 எனவும், 6ம்பிரதிவாதி கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் 7ம்பிரதிவாதியின் அறிக்கையின் பேரில் அளவைகள் மற்றும் எல்லைகள் சட்டம், பட்டா பாஸ்புத்தக சட்டத்தில் கூறியுள்ள வழிமுறைகளை பின்பற்றாமல் செயல்பட்டு வருகிறார் எனவும், உரிமைமூலம் குறித்து வழக்கு நிலுவையில் இருந்தால் உரிமையியல் நீதிமன்றம் தான் உரிமைமூலம் குறித்தும், சுவாதீனம் குறித்தும் தீர்மானிக்க முடியும் எனவும், ஆகவே வழக்குசொத்து 1ம்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், உரிமைமூலம் குறித்து இவ்வழக்கு நிலுவையில் உள்ளதால் கூடுதல் செயலாளரின் சுற்றறிக்கையான ம.சா.ஆ.19 ன்படிக்கு எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதியின் பட்டா ரத்து நடவடிக்கையை தொடர முடியாது எனவும், ஆகவே எதிர்மனுதாரர் பட்டா நடவடிக்கையை நிறுத்த உத்தரவிடக் கோரி மனுதாரர்கள்/வாதிகள் இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii)(a) எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதி தரப்பில் மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் பொய்யானது எனவும், பழனியம்மாளுக்கு விற்பனை செய்த சின்னப்பகவுண்டர் மற்றும் புண்ணியமூர்த்திக்கும் வழக்கு சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை மற்றும் கிரய பத்திரம் எழுதிக் கொடுக்கவும் உரிமையில்லை எனவும், 1ம்மனுதாரருக்கு பழனியம்மாள் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க உரிமையில்லை எனவும், ஆகவே 1ம்மனுதாரர் வழக்கு சொத்தின் உரிமையாளர் என கூறுவது பொய் எனவும், இந்த எதிர்மனுதாரர் அளவை மற்றும் எல்லைகள் சட்டம், பட்டா பாஸ்புத்தக சட்டம், வருவாய் நிலை ஆணைகளுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார் என கூறுவது பொய் எனவும் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(ii)(b) மேலும் எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதி தரப்பில் மேட்டுர்தாலுக்கா, ஆலமரத்துப்பட்டி கிராம பட்டா எண்.5 முத்தாயம்மாள் மற்றும் அவரது மகன்களான செங்கோடகவுண்டர் மற்றும் ராமசாமி ஆகியோர் பெயரில் எ.ம.சா.ஆ.1 அ பதிவேடு, எ.ம.சா.ஆ.3 சிட்டா

இருந்தது எனவும், அவர்களுக்கு பழைய ச.எண்.140, 141 புதிய ச.எண்.277/6 க்கு பட்டா வழங்கப்பட்டது எனவும், ச.எண்.277/6 என்பது 277/6 ஏ மற்றும் 6 பி என எ.ம.சாஆ.2 ன் மூலம் உட்பிரிவு செய்யப்பட்டது எனவும், 277/6 ஏ சொத்திற்கான பட்டாஎண்.1715 தேவராஜிற்கும், பட்டா எண்.1716 செங்கோட கவுண்டருக்கும், சின்னப்ப கவுண்டருக்கும் வழங்கப்பட்டது எனவும், ச.எண்.277/6 பி என்பது 277/6 பி1 விஸ்தீரணம் 0.05.5 அருந்ததியர் மயான பாதை எனவும், 277/6 பி2 ரயத்துவாரி புஞ்சை பட்டா எண்.1716 ல் செங்கோட கவுண்டருக்கு எ.ம.சா.ஆ.7 ன் மூலம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது எனவும், 1 ம்மனுதாரரின் பெயர் பட்டாவில் குறிப்பிடவில்லை எனவும், வழக்கில் கோரியுள்ள பரிகாரம் குறித்து வருவாய் அதிகாரிகள் மட்டும் தான் மனுதாரர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதால் இவ்வழக்கினை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பில்லை எனவும், எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/6 ம்பிரதிவாதி கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்குரையை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கானது வழக்கு சொத்து 1 ம்மனுதாரர்/1 ம்வாதிக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும் 1 ம்பிரதிவாதி வழக்கு சொத்து குறித்து தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் அடிப்படையில் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும் கோரியுள்ளது தெரியவருகிறது. வழக்கு சொத்தின் உரிமைமூலம் குறித்து உரிமையியல் நீதிமன்றம் தான் தீர்மானிக்க வேண்டும் என்பது நிலை நிறுத்தப்பட்ட சட்ட கோட்பாடாகும். இவ்வழக்கும் உரிமைமூலம் குறித்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) எதிர்மனுதாரர் தரப்பில் 1 ம்மனுதாரருக்கு வழக்கு ச.எண்.277/6 ஏ–ற்கு பட்டா வழங்கப்படவில்லை என கட்சி செய்தபோதும், ம.சா.ஆ.8 ன்படிக்கும், எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணமான எ.ம.சா.ஆ.4 சிட்டாவின்படிக்கும், பட்டா எண்.1715 1 ம்மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே 1 ம்மனுதாரருக்கு

பட்டா வழங்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தரப்பில் முன்வைத்த கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) இந்நிலையில் வழக்கு சொத்தான ச.எண்.277/6 ஏ–ற்கு யார் உரிமையாளர் என்பது குறித்து இவ்வழக்கில் முடிவு செய்தால் 1ம்வாதியின் பெயரில் ஏற்பட்ட பட்டா செல்லுமா, இல்லையா என தீர்மானிக்க முடியும். இந்நிலையில் உரிமைமூலம் குறித்து இவ்வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதி பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்க முடியாது என்பது ம.சா.ஆ.19 சுற்றறிக்கையின் மூலமும், அதனுடன் இணைக்கப்பட்ட சீனிவாசன் எதிர் மாவட்ட ஆட்சியர் மற்றும் சிலர் என்ற முன்தீர்ப்பின் மூலமும் தெரியவருகிறது. ஆனால் எதிர்மனுதாரர் பட்டா மாறுதல் உத்தரவை ரத்து செய்ய 1, 4 பிரதிவாதிகள் மனுகொடுத்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் விசாரணை செய்வதற்காக ம.சா.ஆ.15, 17 அழைப்பாணைகளை அனுப்பியுள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் உரிமைமூலம் குறித்து இவ்வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் சார் ஆட்சியர் பட்டா குறித்து விசாரணை செய்ய முடியாது என்பதால் மனுதாரரின் வழக்கில் முதல்நோக்கு வழக்கு உள்ளதும், சட்டசமநிலை வாய்ப்பும் மனுதாரர்களுக்கு உள்ளது எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் இவ்வழக்கு முடிவு செய்வதற்கு முன்பு பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் அதில் எவ்வித பயனும் ஏற்படாது என்பதாலும், மனுதாரர் பெயரில் ம.சா.ஆ.8 உள்ளதால் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்பதால் வழக்கு சொத்து குறித்து மனுதாரர் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதியிடம் நிலுவையில் இருக்கும் பட்டா ரத்து நடவடிக்கையில் இவ்வழக்கு முடியும் வரை எவ்வித உத்தரவும் பிறப்பிக்கக்கூடாது என எதிர்மனுதாரர்/6ம்பிரதிவாதியை தடையுறுத்தி மனுதாரர்கள் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது எனவும், அவரவர் செலவுத்தொகைககளை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமெனவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :— இல்லை</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:—</u>

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 21.03.2017 பொது அதிகார ஆவணம் | அசல் |
| ம.சா.ஆ.2 20.03.1946 கிரயப்பத்திரம் | பதிவுநகல் |
| ம.சா.ஆ.3 19.05.1953 பாகசுறார் பத்திரம் | பதிவுநகல் |
| ம.சா.ஆ.4 24.09.1982 கிரயப்பத்திரம் | பதிவுநகல் |
| ம.சா.ஆ.5 19.05.1988 கிரயப்பத்திரம் | பதிவுகல் |
| ம.சா.ஆ.6 20.01.1992 தானசெட்டில்மெண்ட் பத்திரம் | பதிவுநகல் |
| ம.சா.ஆ.7 24.01.1992 1ம்மனுதாரர் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் | பதிவுநகல் |
| ம.சா.ஆ.8 14.03.2017 1ம்மனுதாரர் பெயரிலுள்ள பட்டா எண்.1715 | கணிணிநகல் |
| ம.சா.ஆ.9 கந்தாய ரசீதுகள் (4 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.10 06.02.1975 கிரயப்பத்திரம் | பதிவுநகல் |
| ம.சா.ஆ.11 14.12.2016 கணிணிபட்டா எண்.1594 | கணிணிநகல் |
| ம.சா.ஆ.12 03.09.2012 கணிணிபட்டா எண்.198 | கணிணிநகல் |
| ம.சா.ஆ.13 மாதிரி வரைபடம் | அசல் |
| ம.சா.ஆ.14 பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டாட்சியர் 2ம்மனுதாரருக்கு அனுப்பிய விபரங்கள் | அசல் |
| ம.சா.ஆ.15 அழைப்பாணை கடிதங்கள் (6 எண்ணிக்கை) | அசல் |
| ம.சா.ஆ.16 23.03.2017 தாவாசொத்தினை 1ம்வாதி பெற்ற விபரம் | அசல் |

ம.சா.ஆ.17 26.08.2020 விசாரணை அழைப்பாணை உண்மைநகல்

ம.சா.ஆ.18 19.02.2019 மாவட்ட வருவாய்அலுவலரின் செயல்முறைகள் உண்மைநகல்

ம.சா.ஆ.19 12.03.2018 சுற்றறிக்கை மற்றும் நகல்

W.P.No.9215 of 2013 & M.P.No.1 of 2013 ன் உத்தரவு கணிணிநகல்

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :– இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

எ.ம.சா.ஆ.1 25.07.2017 அ பதிவேடு உண்மைநகல்

எ.ம.சா.ஆ.2 25.07.2017 அ பதிவேடு உண்மைநகல்

எ.ம.சா.ஆ.3 25.07.2017 சிட்டா உண்மைநகல்

எ.ம.சா.ஆ.4 25.07.2017 சிட்டா உண்மைநகல்

எ.ம.சா.ஆ.5 புலவரைபடம் உண்மைநகல்

எ.ம.சா.ஆ.6 கிராமவரைபடம் உண்மைநகல்

எ.ம.சா.ஆ.7 27.07.2017 சிட்டா உண்மைநகல்

எ.ம.சா.ஆ.8 25.07.2017 அடங்கல் உண்மைநகல்

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.